15—

ESI மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***15486—திரு. G. அசோகன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, சிவகாசி இரயில் நிலையம் அருகில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, தீக்காயம் மற்றும் உடலுறுப்பு சீரமைப்பு அறுவை சிகிச்சைப் பிரிவினை துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை வணங்கி மகிழ்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு சிவகாசி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. அசோகன் அவர்கள் சிவகாசியில் அமைந்துள்ள E.S.I. *மருத்துவமனையைத் தரமுயர்த்த* வேண்டுமெனக் *கேட்டுள்ளார்கள். சிவகாசியில் அமைந்துள்ள 50* படுக்கைகள் கொண்ட E.S.I. *மருத்துவமனையை 100* படுக்கைகள் கொண்ட *மருத்துவமனையாகத் தரமுயர்த்த அரசாணை வழங்கப்பட்டுள்ளது. சிவகாசி* ESI *மருத்துவமனையில் 6* படுக்கைகள் கொண்ட *சிறப்பு தீக்காய சிகிச்சைப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மேலும்,* plastic surgery *போன்ற அதிநவீன சிறப்பு சிகிச்சை* பெற வேண்டியவர்கள் *அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து* கொண்ட *மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறார்கள்* என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* G. *அசோகன் அவர்கள்.*

திரு. G. அசோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் கேட்க வேண்டிய கேள்விகள்*

எல்லாவற்றுக்கும் பதில் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், அதை விரைவில் செய்து கொடுக்க வேண்டும். ஏனென்றால், சிவகாசியில் பட்டாசு ஆலைகளும், தீப்பெட்டி தொழிற்சாலைகளும் நிறைய இருக்கின்றன. அது fire zone ஆக இருப்பதனால் plastic surgery and skin bank இருந்தால், தொழிலாளர்களை அந்தத் தீப்புண் காயத்திலிருந்து காப்பாற்றுவதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, நன்றி சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி இரயில் நிலையம் அருகில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையைத் தரம் உயர்த்தி, தீக்காயம் மற்றும் உடலுறுப்பு சீரமைப்பு அறுவை சிகிச்சை செய்யக்கூடிய வகையில், மருத்துவமனையைத் தரமுயர்த்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய சூழ்நிலைகளில், தொழிலாளர்கள் இதுபோன்ற பெரிய விபத்துகளால் பாதிக்கப்பட்டு, அந்த ரணங்களால் வலிகள் ஏற்பட்டு பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய அந்த வலிகள் தனக்கு ஏற்படுவதாகக் கருதியதால், உடனடியாக இங்கே இருக்கின்ற நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சராக இருக்கக்கூடிய நானும், சேர்ந்து அதுபோன்று இங்கே இருக்கக்கூடிய அரசுத் துறையைச் சார்ந்த பல்வேறு அதிகாரிகளையும் அழைத்து, இதுகுறித்த ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தி, எதிர்காலத்தில் இதுபோன்ற விபத்துகள் நடைபெறாமல் இருப்பதற்குரிய வழிவகைகளைக் காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, இதுபோன்ற 832 தொழிற்சாலைகளில் இதுவரை விபத்தே ஏற்படாமல் இருந்திருக்கிறது. எனவே, அவர்களையெல்லாம் அழைத்துப்பேசி, எதிர்காலத்தில் விபத்தில்லாத ஒரு சூழ்நிலையை நிச்சயமாக உருவாக்குவோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் எத்தகைய மனநிலையில் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார் என்பதை

நான் புரிந்துகொண்டேன். திருப்பூரிலே ரூ.95 கோடி மதிப்பீட்டில் உயர் தொழில்நுட்பம் கொண்ட E.S.I. மருத்துவமனை விரைவிலே அமைக்கப்படவிருக்கிறது என்பதையும், ஸ்ரீபெரும்புதூரிலே 146 கோடி ரூபாய் மதிப்பீட்டில் E.S.I. மருத்துவமனை அமைக்கும் பணிகள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன என்பதையும், தூத்துக்குடியிலே 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில் E.S.I. மருத்துவமனை அமைப்பதற்கான பணிகள் நடைபெறுகின்றன என்பதையும், திண்டுக்கல் மாவட்டத்தில் 100 படுக்கைகள் கொண்ட E.S.I. மருத்துவமனை அமைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும், ராணிப்பேட்டை மற்றும் வாணியம்பாடியில் 100 படுக்கைகள் கொண்ட E.S.I. மருத்துவமனை அமையவிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. G. அசோகன் அவர்கள். உங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எல்லா பதிலையும் சொல்லிவிட்டார்கள். அழகாக நன்றி சொல்லிவிட்டு உட்காருங்கள்.

திரு. G. அசோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் கிட்டத்தட்ட 4.75 இலட்சம் E.S.I. cardholders இருக்கிறார்கள். தீப்பெட்டி, பட்டாசு மற்றும் அச்சுத் தொழில்கள் இருக்கின்றன. ஏற்கெனவே, சென்னையிலும், கோயம்புத்தூரிலும் ஒரு Medical College E.S.I.-மூலம் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதேபோன்று, சிவகாசியிலும் ஒரு E.S.I. Medical College நிறுவுவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசியில் 1,050 தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன; 56,000 தொழிலாளர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொண்டு இவர்களுக்கெல்லாம் உதவி செய்கின்ற வகையிலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி, விரைவிலே சிவகாசியில் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[*2022 அக்டோபர் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Lorry *தொழில்,* borewell *தொழில், ஜவுளித் தொழில் என்று தொழிற்சாலைகள் நிறைந்த பகுதி, திருச்செங்கோடு. தொழிலாளர்கள் நிறைய இருக்கிறார்கள்.* E.S.I. *மருத்துவமனை வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அதற்கு நிரந்தரமாக ஒரு புதிய கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.*

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை ஏற்று, விரைவில் அரசு சார்பிலே* E.S.I. *மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 6 முதல் 10 வரை)@

(இ) உடுக்குறியிடாத வினாக்களாக மாற்றப்பட்ட உடுக்குறியிட்ட வினாக்கள் (பட்டியல்கள் 11 முதல் 16 வரை)@@

[**குறிப்பு**: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

@ *137 முதல் 557 வரையிலான பக்கங்களில் இணைப்பு* I *ஆக அச்சிடப்பட்டுள்ளது*

@@ *558 முதல் 968 வரையிலான பக்கங்களில் இணைப்பு* II *ஆக அச்சிடப்பட்டுள்ளது.*